
# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ சித்திரை 1978 ★ இதழ் - 28





# திருக்கோயிற் கோபுரம்

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்றும், கோபுர தரிசனம் பாவ விமோசனம் என்றும் பெரியவர்கள் கூறுவர். கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக் கால்களாற் பயனென் என்று திருநாவுக்கரசு நாயனார் நம் சிந்தனையைத் தூண்டுகிறார்.

திருக்கோயிலின் பல்வகை அங்கங்களிலும் அமைப்புக்களிலும் அகன்றும் ஆழ்ந்தும் உயர்ந்தும் நிற்பது திருக்கோபுரம். அதன் அழகும் கம்பீரமும் தத்துவமும் தனித்தன்மையானவை. மூலத்தானத்துள் அமைந்துள்ள சூக்கும லிங்கம், கொடிமரத்தடியில் உள்ள பத்திர லிங்கம் என்பன போலன்றி வெளியிலே எல்லோரும் துலாம்பரமாகத் தூரத்தேயும் நின்று கண்டு கைதொழ அமைந்தது தூல லிங்கமாய கோபுரம். ஆலயத்தின் மற்றெல்லா அமைப்புக்களிலும் பார்க்க மிக்குயர்ந்து ஆகாயத்தை அளாவி நிற்பது ராஜகோபுரம். இறைவன் கோபுரத்திலும் சாந்நித்தமாய் எழுந்தருளியுள்ளார்.

காஞ்சிமுதல் குமரிவரை ஆன்மீக உணர்வின் அடித்தளமாய், கலையியல் பண்பாட்டின் உறைவிடமாய், சிற்பச் செல்வங்களின் சிறப்பினைத் திறம்பட விளக்கும் கோபுரங்களின் அமைப்பை ஒரு சில வாக்கியங்களில் கூறி விட முடியாது.

கோபுரம் பெரும்பாலும் ஐந்து மாடங்களாய நிலைகளைக் கொண்டது. பெருவாசலும் ஐந்து மாடங்களுமாய ஆறு அமைப்புக்களும் உடம்பின் ஆறு ஆதாரங்களைக் குறிப்பனவாகும். அவை மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்பனவாம்.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

★ பிறவியைப் பெற்றது பிரானடி போற்றவே ★

உ

# கடவுள் வணக்கம்

## திருநாவுக்கரசுநாயனர் தேவாரம்

### திருவாலவாய் — திருநேரிசை

திருச்சிற்றம்பலம்

நம்பனே நான்முகத்தாய் நாதனே ஞானமூர்த்தி
என்பொனே யீசாவென்றென் றேத்திநா னேசற்றென்றும்
பின்பினே திரிந்து நாயேன் பேர்த்தினிப் பிறவாவண்ணம்
அன்பனே ஆலவாயி லப்பனே அருள்செயாயே.

திருவாலவாயிலில் திருக்கோயில் கொண்டருளிய அன்புக்குரிய அப்பரே, எல்லா உயிர்களும் உறும் நகைக்குரியவரே, நான்கு திருமுகங்களையுடையவரே, இயவுளே, அருளுருவினரே, எனக்குப் பொன்னுயிருந்து நிலைத்த பயனைச் செய்பவரே, என்னை உடையவரே தேவரீரை இவ்வாறு வணங்கி மனவிகாரங்களை அகற்றிப் பூசித்துப் பின் தொடரும் அடியேனை இனிமேல் வினைப்பயன் காரணமாகப் பிறவி எடாவண்ணம் திருவருள் செய்வீராக.

---




## வினைத்திட்பம்

தொழில் செய்து முடிப்பவனுக்கு வேண்டிய மனவுறுதி

எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு.

வேறு எவ்வகையான திடம் உடையவராய் இருந்தாலும், வேலையில் வலிமை விரும்பாதாரை உலகத்தார் நன்கு மதிக்கமாட்டார்கள்.

### Firmness in Action

However strong they may otherwise be, the world has no regard for them who have no regard for firmness of action.

---

ஒருவர் தம் வாழ்வில் ஒரு முறையேனும் கும்பாபிஷேக விழாவைக் கண்டு தொழுதல் வேண்டும்.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி) திருக்கோயிற்....

### மூலாதாரம்

கோபுரவாசல் மூலாதாரம் எனப்படும். அதன் ஆதார அதி தெய்வங்களாக வலப்புறத்தில் கணபதியும் இடப்புறத்தில் முருகனும் இருப்பர். கோபுரவாசல் கோயிலின் பெருவழியாகும். "உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம், வள்ளற் பெருமானுக்கு வாய் கோபுர வாசல்" என்பது திருமந்திரம்.

### சுவாதிட்டானம்

வாசலுக்கு மேலேயுள்ள நிலை சுவாதிட்டானம். அங்கே இரு புறத்தும் பிரமாவும் சரஸ்வதியும் இருப்பர். இம் மாடத்தின் படிமங்களாக உள்ள உருவங்கள் மிகப் பலவாகும். அவை பிருதுவி தத்துவத்தில் உள்ள 108 புவனங்களில் வாழ்கின்றவராகிய தேவரைக் குறிக்கும். இம் மாடத்தின் நிறம் மஞ்சள். இது நிவிர்த்தி கலையைக் குறிக்கும்.

### மணிபூரகம்

அடுத்து மேலேயுள்ள நிலை மணிபூரகம் என்னும் ஆதாரமாகும். இதில் திருமாலும் இலக்குமியும் அதிட்டானமாய் இருப்பர். இதில் அப்பு தத்துவத்திலுள்ள 56 புவன தேவர்களும் இருப்பர். இதன் நிறம் நீலம். இது பிரதிட்டா கலையைக் குறிக்கும்.

### அநாகதம்

அடுத்து மேலுள்ள நிலை அநாகதம். இது தேயுதத்துவத்தைக் குறிக்கும். இதில் உருத்திரனும் உமையும் அதிட்டானமாய் இருப்பர். இதில் தேயுதத்துவத்திலுள்ள 27 புவன தேவர்களும் இருப்பர். இதற்குரிய நிறம் சிவப்பு. இது வித்தியாகலையைக் குறிக்கும்.

### விசுத்தி

அடுத்து மேலுள்ள நிலை விசுத்தி. இது வாயுதத்துவத்தைக் குறிக்கும். இதில் மகேசனும் மகேசையும் அதிட்டான தெய்வங்கள். இதில் வாயுதத்துவத்துக்குரிய 18 புவன தேவர்களும் இருப்பர். இதற்குரிய நிறம் சாம்பல் வர்ணம் அல்லது புகை நிறம். இது சாந்தி கலையைக் குறிக்கும்.

### ஆஞ்ஞை

அடுத்து மேலுள்ள நிலை ஆஞ்ஞை. இது ஆகாய தத்துவத்தைக் குறிப்பது. இதில் சதாசிவனும் மனோன்மணியும் அதிட்டானமானவர்கள். ஆகாய தத்துவத்தில் உள்ள 15 புவனங்களில் தேவர்களும் இதில் இருப்பர். இத் தத்துவத்தின் நிறம் வெள்ளை. இது சாந்தியதீத கலையைக் குறிக்கும்.

இவ்வாறாகக் கோபுரத்தில் 224 புவனங்களும் அவற்றின் புவன தேவர்களும் அவர்தம் பத்தினிமாரும் எழுந்தருளி இருப்பர். ஐந்து நிலைகளுக்கு அப்பால் ஏழு, ஒன்பது நிலைகள் பொருந்திய கோபுரங்களும் உள்ளன. அங்ஙனம் மேலேயுள்ள மாடங்கள் நிராதார தத்துவத்தைக் குறிப்பனவாகும். அவற்றுக்கும்மேலே உளவாயின் அவை மீதானத்தைக் குறிப்பனவாகும்.

கோபுரங்கள் பெரும்பாலும் கிழக்கு நோக்கியே அமைவன. சில மேற்கு நோக்கி அமைந்து மேலைக் கோபுரம் எனப்படும். அதைச் சொர்க்க வாயில் என்பர். அது திறந்தால் ஞானம் கைகூடும் என்பது கருத்து. பங்குனி உத்தரத்திலும், மார்கழித் திருவாதிரையிலும் திறக்கப் பெறுதல் வழக்கம். ★


---

ஆதாரம்: புதிய 10ஆம் வகுப்பு இந்து சமயப் பாடத் திரட்டு

---

**நாம் செய்யும் புண்ணியங்கள் பெருங்கணக்கில் இடம்பெறும்**

# அம்பிகை



★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது ஔவையாரின் அமிர்தவாக்கு. இது தைத்திரியோப நிடதத்தில் மாதாவைத் தெய்வமாக வணங்கு, பிதாவைத் தெய்வமாக வணங்கு என்னும் கருத்தில் மாத்ரு தேவோபவ, பித்ருதேவோபவ என்று அருளப்பட்டுள்ளது.

அன்னை ஒருத்தி எமக்கு இந்தப் பிறப்பிலேதான் தாயாக இருக்கிறாள். ஆனால் அம்பிகை நாம் எடுக்கும் பிறவிகளில் எல்லாம் எமக்கு அன்னையாய் இருப்பதோடு எல்லாச் சீவன்களுக்கும் என்றும் எல்லாப் பிறப்புக்களிலும் அன்னையாக இருக்கிறாள். அவளிடமிருந்தே எங்கள் அன்னை தாய்த் தன்மையைப் பெறுகிறாள். இறைவனும் அம்பிகை யீடம் தாய்த் தன்மையைப்பெற்றே உலகத்தைத் தாயாய் முலையைத் தந்து வளர்த்து அருள் செய்கின்றான். அன்னை இல்லையேல் அப்பனின் அருள் இல்லை.

அம்பிகை எல்லா எழுத்துக்களின் வடிவவாக இருப் பவள். மந்திர தேவதைகளுக்கு அட்சரங்களே அங்கங்கள். உலகம் முழுவதற்கும் ஒப்பற்ற ஒரு தாயாக உள்ளவள் அம்பிகையானதால் அவளைப் பராசக்தி என்பர். பரதேவதை என்று வேதங்கள் போற்றுகின்றன. பரதேவதையாக உள்ள அம்பிகை தலைசிறந்த பதிவிரதை. அவள் தனது பதியான சிவபெருமானுக்கு எல்லாமாய் இருப்பவள். எல் லாம் உண்டாகும் இடம் அம்பிகையின் இடம். அவள் எமக்கு எதுவேண்டுமென்பதை அறிந்து அதை எமக்கு உபகரிப்பாள். அவள் உபகரிக்காவிட்டால் எமக்கு வாழ் வில்லை. நதிகள் யாவும் நாடுகளை வளஞ் செய்கின்றன. நதிகள் யாவும் அம்பிகையின் திருவருளேயாகும். சரயு என்பது தாய் முலையன்னது என்று கம்பர் பாடியுள்ளார். கம்பருக்கு அம்பிகை அருளிருந்தது.

அம்பிகையின் உபகரிப்பால் முடிமன்னர்களும் முனி வர்களும் புலவர்களும் வாழ்வும் வனப்பும் வாக்குவல்லப மும் பெற்றனர். அம்பிகையை ஆராதனை செய்தால் எல் லாத் தெய்வங்களையும் வழிபட்ட பலன் கிடைக்கும். சத்தியம் என்பது சகல தெய்வ சொரூபம். சத்தியமே இறைவியின் வடிவம். சத் உண்மையானது. சித் அறி வானது. சத் இறை வடிவு. சித் அம்பிகை வடிவு. அறிகிறது இல்லையேல் உள்ளதை உணரமுடியாது. இரண்டும் ஒன்று.

பரதேவதையாகவுள்ள அம்பிகை ஞானசொரூபி. வித்தை வடிவான அம்பிகையை வணங்கினால் கல்வி வளஞ் சிறக்கும். திருமணஞ் செய்து கொள்ளும் பெண் தான் நித் திய மங்கலியாக இருப்பதற்கு அம்பிகையைப் பூசித்தல் அவசியம் என்பர். அம்பிகை மங்களம் பொருந்தியவள்.

அம்பிகையை வணங்கி அட்டமாசித்தி பெற்றவர்கள் அநேகர். சிவனுக்கு அசைவைக் கொடுப்பவள் அம்பிகை யாகிய சிவை.

சக்திக்குக் காளி, சண்டி, பைரவி முதலாய திருநாமங் களும் உண்டு. நான்கு திருக்கரங்களில் கத்தி கபாலம் அபயம் வரதம் உள்ளன. அவளைக் குண்டலம் தலைமாலை, பிரேதக் கைகள் கோத்த ஆடை, நாக்கு வெளியே துருத்திய வண்ணம், கண்கள் பிதுங்கிக்கொண்ட வண்ணம், நிருத்த கோலம் முதலிய அம்சங்களில் வழிபடுபவர்களும் உளர். சிலர் சக்தியைச் சிவமாகச் சிவராத்திரியில் வழிபடுவது உண்டு.

''சிங்கார வதனமுஞ் சந்திரா பரணமுஞ்
சிந்தூர திலக நுதலுஞ்
செங்கையிற் படைகளும் மாணிக்க மாலையுஞ்
சிற்றிடைப் பட்டி னுடையும்

சங்கார மணிவளக் கொங்கையும் பங்கயக்
கரணத்தி லணி தண்டையும்
தளதளென வொளிரு நவரத்தினக் கோவைக
டயங்குமே கலையி னழகும்

கங்கா நதிப்பெருக் கெனவருள் சுரந்தொழுகு
கருணைத் திருக் கண்களுங்
கதிர்கோடி யொருமுகத் துதயமா கியதெனக்
கவினுலவு திருமே னியும்

மங்காத பேரின்ப வடிவுமா யடியன்முன்
வந்தருள் புரிந் தாளுவாய்
வானவர் தினந்தினம் வந்து திருவடிமலர்
வணங்கு பத்திர காளியே.''

பாடல்: திருக்கோணமாமலை பத்திரகாளி அம்மன் பதிகம்.

# மநுதர்மம்

விலங்குத் தன்மையுள்ள உடம்புக்கு மனிதப் பண்பு தருவது கல்வி. அறிவில்லாதவரைப் பிள்ளைகள் என்று வழங்குதல் ஒரு மரபு.

வயது, நரை. பொருள் இவற்றால் எவரும் பெரிய வராவதில்லை. அறிவால் மூத்தவரே பெரியோர்.

படிப்பறிவில்லாதவர் மரப் பாவைகள் போன்றவராவர்.

வறிஞராயினும் வாழ்வாங்கு வாழ்வாரே உயர் குலத்தோர்.

விருந்தோம்புதல் ஐவகை வேள்விகளில் ஒன்று. அது மானுட யக்ஞம் எனப்படும்.

கடவுள், விருந்தினர், பணியாள், பெற்றோர், தான் இவர்களை உணவு முதலியவற்றால் நிறைவு செய்யாதவன் நடைப் பிணம்.

விருந்தோம்புவதால் பொருளும், புகழும், ஆயுளும், நற்கதியும் கிடைக்கின்றன.

ஒவ்வொரு அமாவாசை தோறும் விருந்து கொடுத்தல் சிறந்த சிராத்தம். ★

## காலயுத்தி வருஷம் 1978 - 1979

காலயுத்தி வருஷம் 14-4-78 வெள்ளிக்கிழமை ஆரம்ப மாகிறது. அன்று முதலாளே வீடு வளவுகளைச் சுத்தஞ் செய்து அடுத்துவரும் புதுவருடத்துக்கு வரவேற்பளித்தல் வழக்கம். புதுவருடத்தில் ஏதாவது ஒரு நல்ல செயல் புரிவோம் என்று சங்கர்ப்பஞ் செய்து நீராடிக் கடவுள் வழிபாடு செய்தல் நமது வழக்கம்.

★ இலட்சியமுள்ளவருக்கு வாழ்வு நிம்மதியாய் இருக்கும் ★



# ★ பிராணுயாமம் ★

பிராணுயாமம் மந்தம், மத்தியம், உத்தமம் என மூவகைப்படும். எமது உடம்பிலுள்ள வாயுவுக்குப் பிராணன் என்று பெயர். அதை அடக்கி ஒழுங்கு செய்வது பிராணுயாமம். பன்னிரண்டு மந்திர காலம் வாயுவை அடக்குதல் மந்தம். இருபத்து நான்கு மந்திர காலம் மத்தியம். முப்பத்தாறு மந்திர காலம் உத்தமம்.

உள்ளேயுள்ள மூச்சை ஒரு மூக்கால் விட்டுக்கொண்டே ஒரு பிராணுயாமம் செய்தல் வேண்டும் அது இரேசகம் எனப்படும். பிராணனை அடக்கிக்கொண்டே பிராணுயாமஞ் செய்தல் கும்பகம் எனப்படும். மற்றூர் மூக்கால் வாயுவை இழுத்துக்கொண்டு செய்தல் பூரகம் எனப்படும்.

வெளியில் திரியும் இந்திரியங்களை அடக்குவது பிரத்தியாகாரம் எனப்படும். இருதயத்திலோ, நாபியிலோ, தலையிலோ மனதை நிறுத்துதல் தாரணை எனப்படும். ஓரிடத்தை மனதால் பற்றிக்கொண்டு வேறென்றையும் நினையாமல் இருத்தல் தியானம் எனப்டடும். ஓரிடத்தையும் நினைக்காமல் அதன் பொருளை மாததிரம் ஒன்ருக எண்ணுவது சமாதி எனப்டடுப்.

பன்னிரண்டு பிராணுயாமம் ஒரு தாரணைக்குச் சமம். பன்னிரண்டு தாரணை ஒரு தியானம். பன்னிரண்டு தியானம் ஒரு சமாதி. சனக்கூட்டம் இல்லாத சுத்தமான இடம் பிராணுயாமத்துக்கு ஏற்றது. ★

---

நாமே அசுத்தமாக வாழ்ந்துகொண்டு, மற்றவர்களைச் சுத்தமாக வாழுங்களெனச் சொல்வது எவ்வளவு தவறுகும்!

— மகாத்மாகாந்தி

## நாடுகளும் நாணயங்களும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அங்கானிஸ்தன் | — | அங்கானி |
| 2. | பர்மா | — | கியாட் |
| 3. | கம்போடியா | — | றியல் |
| 4. | ஹொங்கோங் | — | டொலர் |
| 5. | இந்தியா | — | ரூபா |
| 6. | இந்தோனேசியா | — | ரூபயா |
| 7. | கொறியா | — | வொன் |
| 8. | லாவோஸ் | — | கிப் |
| 9. | மலேசியா | — | டொலர் |
| 10. | பாக்கிஸ்தான் | — | ரூபா |
| 11. | பிலிப்பீன்ஸ் | — | பெசோ |
| 12. | தெ. வியட்நாம் | — | பியாஸ்ரர் |
| 13. | தைலாந்து | — | பாட் |
| 14. | கனடா | — | டொலர் |
| 15. | அமெரிக்கா | — | டொலர் |
| 16. | கியூபா | — | பெசோ |
| 17. | மெக்சிகோ | — | பெசோ |
| 18. | ஆஜந்திஞ | — | பெசோ |
| 19. | பிறேசில் | — | குறுசிரூ |
| 20. | சில்லி | — | எஸ்கிடோ |
| 21. | பேரு | — | சொல் |
| 22. | பெல்ஜியம் | — | பிருங் |
| 23. | டென்மார்க் | — | குரோன் |
| 24. | அரேபியக்குடியரசு | — | பவுண் |
| 25. | பிரான்ஸ் | — | பிருங் |
| 26. | இத்தாலி | — | லிரு |
| 27. | நெதர்லாந்து | — | குயில்டர் |
| 28. | நோர்வே | — | குரூன் |
| 29. | போர்த்துக்கல் | — | எஸ்கிடோ |
| 30. | இசுப்பெயின் | — | பிசெற்ரு |
| 31. | சுவீடின் | — | குரூனு |
| 32. | ஐக்கிய இராச்சியம் | — | பவுண் |
| 33 | மேற்குயேமனி | — | மார்க் |
| 34. | அவுஸ்திரேலியா | — | டொலர் |
| 35. | நியூசீலந் | — | பவுண் |

## திருத்தலங்களும் திருவிழாக்களும்

| | | |
|---|---|---|
| சிதம்பரம் | — | ஆருத்ரா தரிசனம் |
| திருச்செந்தூர் | — | கந்தசஷ்டி |
| திருவண்ணமலை | — | கார்த்திகைத் தீபம் |
| ஸ்ரீரங்கம் | — | வைகுந்த ஏகாதசி |
| திருவாலவாய் | — | சித்திரை உற்சவம் |

---

★ மனத்தின் உயர்ந்தநிலை பண்பாடு எனப்படும் ★

*Continued*

# Natesan on Thirukkural

A passing reference might be made here to the attitude which Thiruvalluvar adopted towards some of the issues which assumed imporrance during his age. Though a supporter of the Vedic Religion, he does not countenance the killing of animals for Vedic Sacrifices.

"It is better to abstain from killing a living being and eating its flesh than to perform a Thousand sacrifices, pouring oblations into the fire" he says. At the same time, turning to the critics who, while condemning Vedic Sacrifices are not averse to eating the flesh of the animals, killed by others" he says. "If there is no one to eat the flesh of animals, there will be no one to kill animals and offer their flesh for sale" Neither does he adopt the extreme and impracticable ahimsa doctrine of the jains who condemn agriculture as sinful occupation, because ploughing the earth causes the death of some of the minute living organisms in the soil. On the contrary he commends agriculture as the most benificial occupation in the world. He does not attach importance to birth or caste. "All are born alike" he says, "it is their deeds that give distinction to men". Again he says, "One is not noble because of one's birth in a family of high rank; one is not low, because of one's blrth in a family of low rank." With regard to the Brahmins he says like the Buddha, **those who are compassionate towards all living beings are to be called Brahmins.**

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★


## மில்க்வைற் செய்தி

மில்க்வைற் செய்தி தேவையானோர் பின்வருவன வற்றுள் ஏதாவது ஒரு தொகுதியை அனுப்புங்கள். நாங்கள் தபாற்செலவு கட்டிச் செய்தியை அனுப்புவோம்.

நீல சோப் மேலுறை 10, நீம் சோப் மேலுறை 2,
பார் சோப் மேலுறை 2, மெடிக்கேட்டட் ,, 2,
சலவைப்பவுடர் மேலுறை 2.

மில்க்வைற் த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.


முற்றொடர்:

# தாவர உணவும் தவ வாழ்க்கையும்

### பிரதமர்கள் ஜனாதிபதிகள் கூற்று

பர்மா தேசத்துப் பிரதமராயிருந்த ஊநூ என்னும் பெரியார் தாவர உணவினால் தேகவலுவும் மனவலிமையும் உண்டாகும் என்றும், தாவரவுணவு உண்பவரால் நாட்டுக்குப் பலவிதமான நன்மைகள் உண்டென்றும் எழுதியுள்ளார். அன்றித் தாவர உணவு உண்பவருக்கு அகிம்சை முதலான போதனைகள் தேவையில்லை என்றும், அவர்கள் அன்புமார்க்கத்திலே அன்பின் திருவுருவாக வாழ்பவர்கள் என்றும் கூறியுள்ளார். இன்னும் தாவரவுணவுண்பவர் மத்தியில் இருக்கும்போது ஒருவருக்கு அவரையறியாமலே உண்டாகின்ற மனத்தூய்மையும் ஆத்மீக எழுச்சியும், உலகில் உள்ள சமயகோடிகளெல்லாம் போதிக்கும் திவ்விய நெறிகளைக் கடைப்பிடிக்கும் போக்குக்கு நிகரானதாகும் என்பர். உலக சமாதானம் என்பது உண்மையில் மனச் சாந்தியிலேயே தங்கியுள்ளது. மனச்சாந்தியை அடைவதற்குத் தாவர உணவுகள் தலைசிறந்தவழியாகும் என்பர்.

இந்தியக் குடியரசுத் தலைவர்களாயிருந்த இராசேந்திர பிரசாத், இராதாகிருஷ்ணன் ஆகிய இருவரும் தாவர உணவின் தூய்மையையும் அதனை உண்பவர்தம் எளிய வாழ்வையும் சிறந்த சிந்தனையையும் குறித்து எழுதியதோடு தாமும் தாவர உணவையே உண்டுவந்தனர். அங்ஙனமே இந்திய தலைவர் கிரி அவர்களும் வாழ்ந்து வருகின்றார்.

இவர்களுக்கு முன்வாழ்ந்த எத்தனையோ பெரியார்களும், மாமன்னர்களும் தாவர உணவையே உண்டு புனித வாழ்வு வாழ்ந்து வந்தார்கள். அவர்களின் பெயர்கள் எண்ணில் அடங்கமாட்டா.

### உலகப்பெரியார்கள் சான்று


பரந்துபட்ட உலகத்தைப் பார்க்கும்போது ஆங்காங்கே மிகப்புராதன காலந்தொடக்கம் எத்தனையோ பெரியார்கள் தாவர உணவையே உண்டுவந்தனர் என அறியக்கிடக்கிறது. சிந்தனையாளரான பைதாகொறஸ், பாரசீக மாமன்னரான சைறஸ், வரலாற்றுத் தந்தையான ஏறடற்றஸ், தத்துவநிபுணரான பிளேட்டோ சோக்கிறேட்டீஸ், உரோமப்புலவரான ஓரிட், சிறந்த பேச்சாளராய சிசறோ முதலானோர் தாவர உணவின் சிந்தனா சக்திக்கு எடுத்துக் காட்டாக விளங்கினர்.

இன்னும் லியோ ரொல்ஸ்ராய், சார்ள்ஸ் டார்வின், ருல்வ் வால்ட் எமர்சன், ஸ்ராபோட்கிறிப்ஸ், பெஞ்சமின் பிறுங்ளின் அல்பேட் ஐயின்ஸ்ரீன் முதலான மேதாவிகள் யாவரும் தாவர உணவையே உண்டுவந்தனர். அங்ஙனமே இந்தியாவில் விவேகானந்தர், இரவீந்திரநாத்தாகூர், இராசகோபாலாச்சாரியார் முதலிய பெரியார்களும் வாழ்ந்து வந்தார்கள்.

— தொடரும்

★ அநுபூதிக்காகவே பக்தன் வாழுகிறான் ★

# குருவருள்



சிவபெருமான் குரு வடிவெடுத்துக் குவலயம் உய்ய எழுந்தருளி மும்மலத்தார்களுக்கு அருள் செய்து ஆட்கொண்டருளுவர் என்பது சைவ சமயத்தவரின் கோட்பாடும் நம்பிக்கையும். குடைச் சாமியார் என்று ஆயிரக் கணக்கானோர் கொண்டாடி அடிபணிந்து ஆசிபெறக் கால் நடையாக எங்கள் மத்தியில் உலாவிய கோண்டாவில் கந்தையா சுவாமிகள் பரிபூரணமெய்திய நாள் பெருவிழாவாக 14-2-1978 பிங்கள ஆண்டு மாசி இரண்டாம் நாள் வியாழக்கிழமை நடைபெற்றது.

பின்னர் 14-3-78 பிங்கள ஆண்டு பங்குனி முதலாம் நாள் செவ்வாய்க்கிழமை குருபூசைப் பெருவிழா நடைபெற்றது. கோண்டாவில் சந்தியில் அமைந்த சமாதிக் கோயிலில் 13-3-78 திங்கள் சிவலிங்கப் பிரதிட்டை செய்யப்பெற்றது. கோண்டாவில் சந்தி அருள்கொளிக்கும் புனித இடமாக மாறியுள்ளது. ★

# அருள் விருந்து

ஆதாரம்: தர்மசக்கரம்

1. துயரம் மனிதரைத் தூய்மைப்படுத்துகிறது.
2. உண்மையான அன்பன் பிரதிபலன் கேட்கமாட்டான்
3. அகங்காரம் இருக்கும்வரை அல்லலும் இருக்கும்.
4. இந்திரிய சுகங்கள் அதிகரிக்கத் துக்கமும் அதிகரிக்கும்.
5. இயற்கையின் ஒழுங்கே விதி அல்லது நியதி.
6. அடக்கம், தியாகம். ஊக்கம் மேல்நிலை தருவன.
7. மானிடப் பிறவி மெய்ப்பொருளை அறியவே கிடைத்தது.
8. சஞ்சலம் என்பது மனிதனின் சொந்தப் படைப்பு
9. குழந்தைபோலச் சஞ்சலமற்றிருத்தல் ஞானத்துக்குவழி.
10. வேகத்திலும் பார்க்க நிதானமே உயர்ந்தது.

## கடோபநிஷதம்

உறுதியான இந்திரிய நிக்கிரகத்தை யோகம் என்று கூறுவர். அதனல் யோகி ஞானவான் ஆகிருன் யோகம் வாய்க்கவும் வழுவவும் வல்லது.

# Divine Nectar

**by**

**Swami Sivananda**



1. A guilty mind always suspects others.
2. Be prompt in doing all things.
3. Respect the counsel of your parents.
4. Do not injure another man's reputation.
5. Never try to appear what you are not.
6. Keep company with the vertuous.
7. Keep your mind from evil thoughts.
8. Contentment is immerse wealth.
9. Health is the first wealth.
10. A clear Conscience is a soft pillow.

# வெண்டைக்காய் மலிவு

வெண்டைக்காய் ஓரளவு மலிவாகக் கிடைக்கும் காலம் இது. வெண்டைக்காயில் உயிர்சத்து *B*யும், *C*யும் உள்ளன. சூட்டைத் தணிக்கும் காய்கறிகளிற் வெண்டயும் ஒன்று. ஆனுல் இதற்குச் சீரகம் சேர்த்துச் சமைப்பது நல்லது என்பர். ★

# அன்பர் ஆப்தேஜி

சமஸ்கிருத இலக்கிய வரலாறு, சமஸ்கிருத அகராதி முதலிய நூல்களை 1896ஆம் ஆண்டுக்கு முன் பின்னுக எழுதி வெளியிட்ட ஆப்தயின் மகனின் மகனும், உலக இந்து மாமன்றச் செயலதிபருமான ஸ்ரீ எஸ். எஸ். தாதா ஆப்தேஜி அவர்கள், திருக்கோணமலை சிவானநதாலம வெள்ளி விழாவில் விரிவுரையாற்றிவிட்டு வடக்கே வந்தார். திவ்விய ஜீவன மண்டபத்தில் வான்மீகி இராமாயணம் பேசியபின் திருநெல்வேலி *Y.M.H.A.*யில் பேசினுர். மில்க்வைற் தொழிலகத்துக்கும் வருகை புரிந்தார். தொழிலதிபரின் சேவைகளை அறிந்து அச்சா என்று உற்சாகப் படுத்தியபின், அவர் உடைத் தூய்மை, உடல் தூய்மை, உள்ளத்தூய்மைக்குப் பணிபுரிவதை உள்ளன்போடு பாராட்டி எழுதினுர்.

**பிரமச்சரியம் இல்லாதவன் மனத்தை அடக்கமாட்டான்**

## மணியுரை



காண்கின்ற, கேட்கின்ற பொருள்களை அப்படியே நம்பிவிடக்கூடாது. அவற்றைத் தள்ளிவிடவுங் கூடாது. கண்ட கேட்ட காரியங்களை ஆராய்ந்து தெளிதல் வேண்டும். ஐயுற்றுத் தெளிந்தவர்கள் வானத்துச் சம்பவங்களையும் அறிவர்.

நன்மையும் உண்மையுமான மூல காரணங்களை ஆராய அன்பு பெருகும். அன்பு உயிரை உருக்கி அழுக்கை அகற்றும். அன்பு, நேசம் அநு பசைத்தன்மை உள்ளது. சீவர்கள் திருவருளில் ஒட்டிக்கொள்ள வேண்டும். மகான்கள் அன்பைப் பெருக்கித் திருவருள் வசமாகின்றனர்.

திருவருள் சீவர்களை எடுத்துச் சுமக்கும்.
நாம் திருவருள் மயமாகவேண்டியவர்கள்.

## காப்பிய அமைப்பும் பெரிய புராணமும்

பெரிய புராணம் தன்னிகரில்லாத் தலைவனையுடைய தண்டமிழ்க் காப்பியம். திருத்தொண்டத்தொகை பாடியருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகளையே காப்பியத் தலைவனாகக் கொண்டு அவர் துதித்துப் பாடியருளிய அடியார்கள் சிறப்பினை அமைவாகப் பாடியருளிய காப்பியம் பெரிய புராணம். பாட்டுடைத் தலைவன் பெருமை முதலிலும் இடையிலும் முடிவிலும் வழுவிலாத் திறனில் அமைக்கப்பட்டுள்ள முறை போற்றற்குரியது.

பெரிய புராணம் இரண்டு காண்டங்களையும் பதின்மூன்று சருக்கங்களையும் நாலாயிரத்து இருநூற்று ஐம்பத்து மூன்று திருப்பாடல்களையும் கொண்டது. முதற்கண் உள்ள திருமலைச் சருக்கத்தில் திருமலைச்சிறப்பு, திருநாட்டுச்சிறப்பு, திருநகரச்சிறப்பு, திருக்கூட்டச்சிறப்பு, தடுத்தாட்கொண்ட புராணம் ஆகிய ஐந்து பிரிவுகள் உள்ளன.

அடுத்துத் தில்லைவாழந்தணர் சருக்கம் முதல் மன்னிய சீர்ச்சருக்கம் ஈறாகப் பதினொரு சருக்கங்கள் உள்ளன. இச் சருக்கங்களின் பெயர்கள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியருளிய திருத்தொண்டத் தொகையின் திருப்பாடல்கள் பதினொன்றின் முதல் வரிகளில் வருந்தொடர்களைக் கொண்டவையாகும். இறுதியாகவுள்ள வெள்ளானைச் சருக்கம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கைலைக்கு இறைவன் அனுப்பியருளிய வெள்ளானையிலேறிச் சென்றமையைக் கூறுவதாகும்.

திருக்கைலாயத்திலே தொடங்கி திருக்கைலாயத்திலே முடிவுற்றதும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றைத் தொடர்ந்து கூறியுள்ளதும், உலகெலாம் என இறைவன் எடுத்துக் கொடுத்தருளிய தொடரை முதல், இடை, முடிவு ஆகிய மூவிடங்களிலும் பொருத்தமான வாழ்த்து வணக்கமாக அமைத்ததும், தனியடியார்கள் வரலாறு திருநீலகண்டக் குயவனார் முதல் திருநீலகண்ட யாழ்ப்பாணனார் ஈறாக அமைந்துள்ளதும் தெய்விகமானவை என்பர். இன்னும் சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகைத் திருப்பாடல்களின் முடிவுதோறும் ஆரூரன் ஆரூரின் அம்மானுக் காளே என்று பாடியருளிய பான்மையில், சேக்கிழார் சுவாமிகள் தாம் வகுத்த சருக்கங்களின் இறுதிகள்தோறும் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் தோத்திரப் பாடல்கள் அருளியுள்ளார்.

### சருக்கங்கள் பதின்மூன்று

1. திருமலைச் சருக்கம்
2. தில்லைவாழந்தணர் சருக்கம்
3. இலைமலிந்த சருக்கம்
4. மும்மையால் உலகாண்ட சருக்கம்
5. திருநின்ற சருக்கம்
6. வம்பறு வரிவண்டுச் சருக்கம்
7. வார் கொண்ட வனமுலையாள் சருக்கம்
8. பொய்யடிமையில்லாத புலவர் சருக்கம்
9. கறைக்கண்டன் சருக்கம்
10. கடல் சூழ்ந்த சருக்கம்
11. பத்தராய்ப்பணிவார் சருக்கம்
12. மன்னியசீர்ச் சருக்கம்
13. வெள்ளானைச் சருக்கம்



## விகடசக்கர விநாயகர்

விகடசக்கர விநாயகர் என்னும்போது ஏதோ நீண்ட காலம் நமக்குப் பழக்கமானவர்போலத் தெரிகிறது. உண்மைதான். கந்தபுராணத்தின் கடவுள் வாழ்த்தில் வருகின்ற திகடசக்காச் செம்முகமைந்துள்ள விகடசக்கர விநாயகரே இவர். இவர் திருக்கச்சியம்பதியின் தெற்குத் திருவாசலில் அமைந்த ஆயிரங்கால் மண்டபத்தின் முன்புறத்தில் அழகாக எழுந்தருளியுள்ளார். ★

ஆன்மீக வாழ்க்கையில் குரு இன்றியமையாதவர்; அவரே அவ்வாழ்க்கையில் உனக்கு ஏற்படும் சந்தேகங்களையும் இடையூறுகளையும் நீக்க வல்லவர்.

— சுவாமி சிவானந்தர்

★ மன அமைதியால் ஆத்மசக்தி அதிகரிக்கிறது ★



ஔவையார் அருளியது என வழங்கும்

## கல்வி ஒழுக்கம்

முற்றொடர்

26. சிறுமையிற் கல்வி சிலையிலெழுத்து.
சிறுவயதில் கல்வியுடையனுதல் கல்லில் எழுதிய எழுத்துப்போலாகும்.

27. சீரிய தமிழைத் தெளிய வோது.
நல்ல தமிழை நன்ருக நீ கற்றறி.

28. சுற்றமென்பது துகளறு கல்வி.
இனமென்று சொல்லப்படுவது குற்றந் தீர்ந்த கல்வி யுடையவனுதல்.

29. சூக்குமும் தூலமுந் தோன்றக் கற்றறி.
ஞானமும் கிரியையும் தெரிய நீ கற்றறி.

30. சென்றிட மெல்லாம் சிறப்பே கல்வி.
போனவிட மெல்லாம் சிறப்பைத் தருவது கல்வி.

31. சேயன் என்பவன் தீங்கறக் கற்றவன்.
சேயன் என்று சொல்லப்படுவன் குற்றந் தீரக் கற்றவன்.

32. சைகையுஞ் சமர்த்துந் தந்திடுங் கல்வி.
பழக்கத்தையும் திறமையையும் கல்விப் பொருள் கொடுக்கும்.

33. சொல்லும் பொருளும் தோன்றக் கற்றறி.
சொல்லையும் பொருளையும் தெரிய நீ படித்தறி.

34. சோம்பர் என்பவர் சொல் லெழுத்தறியார்.
சோம்பல் உடையவர் என்பவர் சொல்லப்பட்ட எழுத்தை அறியாதவர். ★

## சிவானந்த சீலம்



1. நான் எனது என்பனவற்றை நீக்குதலே உண்மைத் துறவு.
2. தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொள்பவன் முன்னேறுவான்.
3. கடிக்காமற் குரைக்கும் நாயின் குணம் நல்லது.
4. அகந்தை என்பது கடவுளை மறைத்து நிற்கும் தடை.
5. எங்கள் மனம் தூய்மையாக முழுவுலகும் தூய்மையாகும்.
6. பழிவாங்கும் இயல்புள்ளவன் முன்னேற மாட்டான்.
7. அவமதிப்பைச் சகிக்கப் பழகுதல் மேலான தவம்.
8. தீய செயல்களிலும் பார்க்கத் தீய சிந்தனைகள் கேவலமானவை.
9. இரக்கமற்றவரையும் இன் சொல்லால் திருத்தலாம்.
10. விருத்தி செய்ய வேண்டியவற்றுள் பொறுமை முக்கியமானது.

அன்பாகவும் பிரியமாகவும் இருப்பது தர்மம். தனக்குப் பிறர் செய்த தவறுகளை மறப்பதும் மன்னித்துவிடுதலும் தருமம். துயருறுபவனுக்கு ஒரு அன்பான சொல் சொல்லுதல் தருமம். இங்ஙனமாகச் செயல்களிலும் சொல்லிலும் தருமத்தைக் கடைப்பிடிப்பவர் தெய்விக வாழ்வினராவர். ★

## ● மாதர் பகுதி ●

ஆண்களுக்கு அளிக்கப்படும் கல்வி முடிவாக யாரோ ஒரு முதலாளிக்கோ அல்லது ஒரு அரசாங்கத் திணைக்களத்துக்கோதான் பயன்படுகிறது. ஆனுல் படித்த பெண் தன்னுடைய சொந்த வீட்டிலேயே ஒரு பள்ளிக்கூடத்தை அமைத்தவளாகிறுள். பெண்களுக்கு நாம் அளிக்கும் கல்வி ஒரு நல்ல முதலீடு ஆகும்.


நாட்டின் வேலையில் பாதி வீட்டிலுள்ள தாய்மார்கள் சகோதரிகளால்த்தான் செய்யப்படுகிறது. குடும்பத்தை நீங்கள் ஒழுங்காகக்கவனித்தாலன்றி குழந்தைகள் நல்ல குடிமக்களாக மாட்டார்கள். நல்லவர்களாக வளர மாட்டார்கள். பெண்கள் தங்களுக்கிடையே சகோதரி பாசத்தை ஏற்படுத்திக்கொண்டால் ஆண்கள்தாமாகவே நண்பர்களாகிவிடுவர். பெண்கள் தங்கள் இதயத்தைச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். அவர்கள் துவேஷத்துக்கு இடங்கொடுத்தலாகாது. எப்போதும் நல்லெண்ணம் நிலவவேண்டும். மற்றவர்கள் மனதிலும் நல்லெண்ணத்தை ஏற்படுத்தப் பெண்கள் பாடுபடுதல் வேண்டும். பெண்களின் அன்ருட நடத்தை நல்லெண்ணத்தை ஏற்படுத்தப் பெரிதும் உதவுகிறது. சட்டத்தின்மூலம் மாற்றமுடியாதவற்றைக் கல்வி கலாச்சாரத்தால் மாற்ற முடியும். கற்றுக் கொடுப்பதற்குத் தாய்க்குலம் தான் சிறந்த தகுதியை உடையது.

ஆதாரம்; இராஜாஜி

எப்பொழுதும் பணிசெய்யச் சித்தமாயிரு, சந்தர்ப்பத்தை நழுவவிடாதே. ஆத்மபாவத்துடன் சேவை செய்.

— சுவாமி சிவானந்தர்

★ ஆனந்தம் சுத்த மனதைப் பின்பற்றுகிறது ★



# சோல்பரி கண்ட யாழ்நகர் சுவாமி

சுவாமிகளின் அருளிப்பாடுகள் பெரும்பாலும் தமிழ் மொழியிலேயே உள்ளன. தமிழ் தென்னிந்திய மக்களில் பெரும்பான்மையினரின் மொழியாய் இருப்பதோடு இலங்கையின் வடபிரதேசத்திலும் கீழ்ப்பிரதேசத்திலும் வாழும் மக்களின் தாய் மொழியாகும். இது திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மிகப்பழைய மொழியாகும். தமிழருள் பெரும்பான்மையினரும், திராவிட இனத்தவரில் பெரும்பான்மையினரும் இந்து சமயத்தவராவர்.

சுவாமிகள் அருளிச் செய்தன யாவும் இந்துசமய அமைப்பிலும், கோட்பாட்டிலும் உள்ளனவாதலால்; இந்து சமயப் பாரம்பரியம் பண்பாடு என்பன பற்றி இந்தியாவுக்கு அப்பால் அதிகம் அறியப்படாமையால் அவற்றைப் பற்றிச் சில வார்த்தைகள் கூறவேண்டியது அவசியமாகிறது. அவற்றுள்ளும் குறிப்பாகத் தென்னிந்தியாவிலும், வட இலங்கை, கிழக்கிலங்கை ஆகிய பிரதேச மக்களின் நம்பிக்கை சம்பந்தமாகக் கூறவேண்டியது அவசியமாகிறது. இவை மேற்கு நாடுகளில் முற்றுகத் தெரியாதவிடயங்களாகும்.

### சமயத்தவன்

இந்து என்னும் பதம் இந்து நதிப் பள்ளத்தாக்குக்கு இப்பாற் பிறந்தவன் என்னும் பொருள் தருவதாகும். இங்ஙனம் பிறக்காதவர்களுக்கு இந்து சமயம் என்பது குழப்பமான நிலையில் ஒழுங்கற்றதாய்ப் பலவற்றின் கூட்டாகத் தோன்றும். அன்றி ஒருவர் இந்து சமயத்தில் பிறக்கவேண்டுமேயன்றி அச்சமயியாக வருதல் அமையாது என்றும கூறுவர்.

இதற்குக் கூறப்படும் பிரதான காரணங்களில் ஒன்று, மற்றைய அருள் வெளிப்பாட்டுச் சமயங்கள் போலன்றி, இந்து சமயம் இன்று உணரக்கூடிய நிலைமையிலாவது தாபகர் ஒருவரை உடையதன்று. எத்தாபகராவது ஒரு குறிக்கப்பட்ட காலத்தில் தோன்றி மனித சமுதாயத்து உண்மையின் குறிக்கப்பட்ட உருப்படிவத்தையும் விளக்கத்தையும், அவற்றுக்குரிய ஒழுக்கத் தத்துவத்தையும், ஆசார நியதிகளையும் எடுத்துக் கூறுததேயாகும்.

இந்து சமயம் சனாதனதர்மம் என வழங்கும். இது சாசுவதமான, நிலைபேறுடையதான உண்மை ஆகும். இது உலகந்தோன்றிய நாள்தொட்டு நிலவி வந்ததொன்றாகும். இதற்குச் சரித்திர சம்பந்தமான சான்றுகள் காட்டிக் கொள்ள முடியாதாகும்.

சனாதனதர்மத்தின் உண்மைகள் சரித்திர காலத்துக்கு முன்னர் மகா முனிவர்களான இருடிகளுக்கு அருளப்பட்டனவாகும். அவர்கள் அவற்றைத் தங்கள் இருதயத்தில் உணர்ந்தார்கள். அவை பிற்காலத்தில் நான்கு வேதங்களாக வகுக்கப்பெற்றன. இந்துக்கள் யாவருக்கும் நான்கு வேதங்களும் ஆரம்ப தெய்விக நூற்கோட்பாடுகளைக் கொண்ட அத்திபாரமாகும். அது கேட்கப்பெற்றதால் சுருதி எனப்படும். நினைக்கப்பெற்றதால் ஸ்மிருதி எனப்படும்

— தொடரும்

# பனையபிமானம்

வன்னிப் பகுதியில் பனை வளத்தின் பயனை உணர்ந்தவருள் வலைஞர் மடுவில் வாழ்பவரும் ஒருசிலர். அவர்களுள் அன்பர் செபஸ்தியாம்பிள்ளை தம்பிராசா என்னும் கட்டட வேலைச் சிற்பி ஒருவர் பனையின்மீது பற்றுள்ளம் கொண்டு மிகுந்த அபிமானம் காட்டி வருகிறார். மில்க்வைற் தொழிலதிபரின் பனையபிவிருத்தி இயக்கத்துக்குத் தாம் முழுமூச்சாக முன்னின்று முயற்சி செய்வதாயும், தமது பிரதேசத்திலிருந்து பெரிய பனங்காய் தரும் இனத்துப் பனம் விதைகள் ஐயாயிரத்துக்கு அதிகமாகத் தருவதாகவும், தாமே அவற்றை வாகனத்தில் ஏற்றிவிடுவதாகவும் உருக்கமாக எழுதியுள்ளார். பயன்கருதாது இவர் செய்யமுயலும் உதவி பனையின் உதவிபோன்றது, பாராட்டத்தக்கது. இவர் குறிப்பிடும் பனம் பழம் ஒன்றின் நிறை 22 இறுத்தல் இருக்கும் என்று அறியும்போது இது இராவணன் காலத்துப் பனைதானே என்று கருதவேண்டியிருக்கிறது. இந்தப் பெரிய பனங்காய் தரும் பனையினத்து விதைகள் தேவையானோர் முன்கூட்டியே மில்க்வைற் பனைப் பிரசாரப் பகுதிக்கு விண்ணப்பித்துக்கொள்க. வாழ்க தம்பிராசா, வளர்க பனைவளம். ★


# சித்திரை

சித்திரை ஒரு சிறந்த மாதம். இங்கிலாந்திலும் சித்திரை மாதத்துக்குச் சிறப்புண்டு. தமிழர் வருடப்பிறப்பு சித்திரை மாதத்தில் வருவது. சித்திரை நட்சத்திரம் சித்திரைப் பூரணையோடு சேர்ந்து சிறப்பைத் தருவது. சித்திரா பூரணை சிறந்த விழாநாளாகும்.

சித்திரைக்கு நெய், பயறு, மீன், அறுவை, ஆடை, தூசு, நடுநாள், துவட்டா நாள் முதலிய பல பெயர்கள் உண்டு. இருபத்தேழு நட்சத்திரங்களுள் இது நடு நிற்றலால் நடுநாள் எனப்பட்டது. துவட்டா பிறந்தநாளாதலால் துவட்டா என்றும் தச்சன் என்றும் பெயர் பெற்றது. 'சித்திரை இரு மீன்புலிக் கண்போல' என நட்சத்திர மாலை கூறுகிறது. சித்திரை முத்துப்போன்றது என்று வடமொழிப் புலவர் கூறுவர்.

சித்திரை மாதத்து இயற்கை வனப்பைக் கருதி ஆங்கிலப் புலவர் சித்திரைப் பெண் எனச் சிறப்பித்துப் பாடுவார். ★

★ தியானத்தால் மனம் ஒருமுகப்படுகிறது ★



# சூரிய நமஸ்காரம்

சூரியன் உலகத்தின் உயிர். வானத்தின் கண். அது அண்டம் எங்கும் சூட்டையும் ஒளியையும் பரப்புகிறது. அது இருளை அகற்றி மேகத்தை உண்டுபண்ணி மழையைத் தருகிறது. மன்னுயிரை வாழவைக்கிறது. பருவ காலங்களை உண்டாக்கி உயிரினங்களுக்கு உணர்வையும் ஊக்கத்தையும் அளிக்கிறது. இலைகளைப் பசுமையாக்கி அரும்புகளை மலர வைக்கிறது. கண்ணுக்கு ஒளியையும் உடலுக்கு உறுதியையும் தருகிறது.

சூரியனில் இறைவனைக் காண்கின்ருேம். சூரியன் தினந்தோறும் இருவேளைகளில் எமக்கு ஆத்மீக விருந்து அளிக்கிருன். காலையில் அவன் உதித்து வரும்போதும் மாலையில் அவன் மறைந்து போகும் போதும் வானத்தில் அவன் வரையும் அற்புதக் காட்சிகள் எத்துணை அழகானவை. சூரியன் அழகினையும் கலைகளையும் வளர்ப்பவன். அவன் ஆற்றலின் இருப்பிடம். அவன் வானுலகத்தையும் மண் உலகத்தையும் வாழவைப்பவன். பான்மைதரு செய்ய கலைகளைப் பார்மிசை நிலவவைப்பவன். அவன் நமஸ்காரப் பிரியன்.

காலத்தை அளக்கும் கடிகாரங்கள் கண்டுபிடிக்கப்படு முன் சூரிய கடிகாரங்களே காலத்தை அளப்பதற்குப் பயன் பட்டன. இன்றும் நிழலைக்கொண்டு நேரத்தைக் குறிப்பாகக் கொள்ளும் வழக்கம் நிலவுகின்றது. சூரியன் தினந்தோறும் எமக்குத் தோன்றி மறைவதைக் கொண்டு நாம் பெரிய உண்மைகளை உணர்கின்ருேம். இருளும் ஒளியும் போல வறுமையும் செல்வமும் மாறி மாறி வரும். பிறப்பும் இறப்பும் உலகில் சகசம்.

சூரிய ஒளி ஆன்மசக்தியின் தன்மையுள்ளது. அதனுல், தாவரங்களும் உயிர் வர்க்கங்களும் விருத்தியடைகின்றன. இக்கருத்தை நம் முன்னேர்கள் நன்கறிந்திருந்தனர். எனவே அவர்கள் ஞாயிறு வழிபாட்டை ஆரம்பித்து நம் மவரும் நாமும் நன்மை அடையுமாறு நமக்கு விட்டுச் சென்றனர். உயிரமிர்தமாகிய ஒளியின் சக்தியை மனிதர் மானதசக்தியின் மூலமாகத் திரட்டி அடையலாம்.

பகலில் மூன்று சந்தியா காலங்களில் சூரிய நமஸ்காரம் செய்யும் வழக்கமும் உண்டு. சூரிய ஒளியில் உள்ள சக்தியை விஞ்ஞானிகள் ஈதர் என்பர். இதனை மனிதர் அடையப்பெற்ருல் அறிவில் ஒளியுள்ளவராவர். அதனுல் ஞான திருஷ்டி என்னும் பார்வையும் சித்திக்கும். புறக் கண்ணுல் அறியமுடியாத விடயங்களை அகக்கண்ணுல் அறியக்கூடியவராய் இருப்பர்.

சூரியனை முறையாக வழிபட்ட பழைய முனிவர்களுள் யாக்ஞவல்க்கியர் என்னும் பெரியாரும் ஒருவர். அவர் சுக்லயசுர் வேதத்தைக் காண, சூரியனை உபாசனை செய்தார். அதன் பயனுக அவர் அதைப் பிறருக்குப் புலனுகாத வாறு சூரியனருளால் அறிந்தார் என்பர்.

யாக்ஞவல்க்கியர் சூரிய கவசம் என்னும் அருமையான நூலை அருளியுள்ளார். சூரிய வழிபாட்டின் போது பக்தன் தன் உடம்பின் ஒவ்வொரு அங்கத்தையும் சூரிய தேவன் காத்தருள் புரிதல் வேண்டும் என்று வேண்டுகோள் செய்வதாக இத் தோத்திரம் அமைந்துள்ளது.


— தொடரும்

---

# கிளிநொச்சியில் பெருவிழா

கிளிநொச்சிப் பிரதேசத்திலே உருத்திரபுரத்திலே பெரியார் வே. கதிரவேலு அவர்கள் உருவாக்கி வருகின்ற குருகுலம் நாளும் நல்ல முறையில் நடைபெற்றுப் பணி புரிந்து வருகின்றது. அண்மையில் அவர் தமது பணிகளைப் பன்முகமாகப் பரவிப் பெருப்பித்துக்கொள்ளுமுகமாக நடத்திய பெருவிழா 13-3-78 புதன்கிழமை நடைபெற்றது. அவ்வமயம் புதிய கட்டடத் திறப்புவிழாவும், சர்வசக்தி பயிற்சி ஆரம்பமும், குருகுலத்தின் பதினுன்காம் ஆண்டு விழாவும் நடைபெற்றன. மில்க்வைற் தொழிலதிபர் திரு. கனகராசா அவர்கள் குத்துவிளக்கேற்றிக் குருகுலத்தின் பணிகளை வியந்து பேசினுர்கள்.

---



★★★★★★★★★★★★★

# தாபகர் தினம்

★★★★★★★★★★★★★

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தை 1927-ஆம் ஆண்டில் தாபித்தவரும், இன்றைய தொழிலதிபர் திரு. க. கனகராசா அவர்களின் தந்தையாருமான அமரர் திரு. வீ. மு. கந்தையாபிள்ளை அவர்களுடைய தினம் தொழிலகத்தின் வள்ளுவர் கோட்டத்தில் விமரிசையாகக் கொண்டாடப்படும். அன்று அமரரின் மைந்தர்கள் மருமக்கள், புதல்வியர், மருகியர், பேரக்குழந்தைகள் எல்லோரும் அவரின் சிராத்தத்தில் பங்கு பற்றுவார்கள். அன்றைய மகேஸ்வர பூசையில் உறவினர்கள், தொழிலாளர்கள் பங்குபற்றுவார்கள்.

தாபகர் தினம்: 10-4-78. ★

---

★ இருதயம் இறைவனுக்குரிய புனித ஆசனம் ★

ஒவ்வொன்றுக்கு ஒவ்வொருவர்

# சட்ட மேதை ஏ. வி. குலசிங்கம் அவர்கள்

11-10-1890 — 16-1-1978

காரைநகரில் களபூமியிற் பிறந்த வர்ணகுலசிங்கம் அவர்கள், இளமையில் மலாய் நாட்டில் கல்வி பயின்று; ஆங்கிலம், பிறெஞ், லத்தீன் முதலிய பாடங்கள் உட்பட ஏழு பாடங்களில் டிஸ்ரிங்சன் என்னும் திறமைச் சித்தியுடன் கேம்பிரிட்ஜ் யூனியர் தேர்வில் வெற்றிபெற்றார். இளமையிலேயே மலாயாவில் எழுதுவினைஞர் வேலைபார்த்த இவர், அதனை விட்டுத் தாயகம் திரும்பி மேற் படிப்பைத் தொடர்ந்தார்.

ஆங்கிலப் புலவர் சாள்ஸ்டிக்கின்ஸ் எழுதிய நூல்களில் ஆர்வமும் ஈடுபாடும் அதிகம் கொண்ட இவர், அவற்றைப் பலமுறை வாசித்து ஆங்கில மொழியைச் சரளமாக எழுதவும் பேசவும் ஆற்றல் உள்ளவரானார். வட்டுக்கோட்டையில் கேம்பிரிட்ஜ் சீனியர் பரீட்சையில் சித்தியெய்திய பின், காரைநகர் இந்துக்கல்லூரியில் இரண்டாண்டுக் காலம் ஆங்கில ஆசிரியராயிருந்தார்.

பின்னர் புறொக்டர் என்னும் வழக்கறிஞராகி நொத்தாரிசு வேலையையும் பார்த்து வந்தார். இவரின் தாயார் அன்னப்பிள்ளை என்பார், காரைநகரில் நொத்தாரிசுவாகத் தொழில் புரிந்த இராமநாதர் வேலுப்பிள்ளையின் புதல்வியாவர். அன்னப்பிள்ளை சுதுமலையைச் சேர்ந்த சின்னத்தம்பி ஐயாத்துரையை மணந்து பெற்ற பிள்ளையே வர்ணகுலசிங்கமாவர்.

ஐயாத்துரை வர்ணகுலசிங்கம் என்னும் பெயரை A. V. குலசிங்கம் என வழங்கிவந்த இவருக்கு அப்புக்காத்தாக விருப்பம் உண்டானது. குடும்பத்தில் தாய்மாமன்மார் தம்பு, முத்தையா, ஆகியவர் நொத்தாரிசுகளாக இருந்தனர். எனவே அப்புக்காத்துப் பயிற்சி பெறக் கொழும்புக்குச் சென்றார்.

ஆங்கிலேய நாகரிகமும், முதலாம் உலக மகா யுத்த நெருக்கடியும் நிலவிய காலத்தில் குலசிங்கம் அவர்கள் அப்புக்காத்துப் பயிற்சி பெற்றார். தமது நாளாந்தச் செலவுக்கு மேலதிக பணந்தேடுவதற்கு அவரின் ஆங்கிலப்புலமை கைகொடுத்தது.

அக்காலத்தில் கொழும்பில் வெளிவந்த இலங்கையர் (Ceylonese) என்னும் பத்திரிகைக்கு எழுதி வந்த இவர், புதிதாக ஆரம்பிக்கப்பட்ட டெயிலிநியூஸ் என்னுந் தினசரிக்கும் அருமையான தலையங்கங்களைத் தீட்டிவந்தார். அவர் தலையங்கங்களைத் தம்கையால் எழுதுவதில்லை என்றும், அவற்றை அவர் வை. சி. சி. கு. திறம் சுருட்டை உருட்டி நெருடிப் புகைத்தவாறு உலாவிக்கொண்டே சொல்லுவார் என்றும், அவற்றை எழுதிக் கொடுத்த யான்ஸ் என்பார் டி. ஆர். விஜயவர்த்தனாவின் வாழ்க்கையும், காலமும் என்னும் நூலில் அருமையாகப் புகழ்ந்துள்ளார். பத்திராதிபரின் அலுவலகத்துக்கு அண்மையில் இருந்த படுக்கை அறையில் உறங்கும் வழக்கம் கொண்ட குலசிங்கம் அவர்கள், சிலவேளைகளில் சாள்ஸ்டிக்கன்ஸ் எழுதிய நூலொன்றைக் கையில் பிடித்தவாறே அலுவலகத்தில் வேலைபார்த்தவருக்கு ஆங்கிலச் சுவையூட்டும் வழக்கத்தையும் உடையவராயிருந்தார் என்றும் உதவிப்பத்திராதிபர்கள், நிருபர்கள் மெய்மறந்து கேட்டிருப்பர் என்றும் யான்ஸ் எழுதியுள்ளார். ருசியப் புரட்சி, உலக சமாதானம் போன்ற நிகழ்ச்சிகளை அருமையாக எழுதிய குலசிங்கம் அவர்களின் சொல்லோவியங்களை இன்றும்தான் பொன்னெனப் போற்றி வைத்துள்ளார்கள். வியன்மன், கிறௌதர் முதலான எழுத்தாளர்களின் படைப்புக்களோடு குலசிங்கத்தின் படைப்பும் பெருவிருந்தாக அமைந்திருந்தது. குலசிங்கத்தின் படைப்புக்களுக்கு ஆங்கிலேயர் பெருமதிப்புக் கொடுத்தனர்.

குலசிங்கம் அவர்களின் ஆங்கிலப்பாணி ஆற்றுப் பாய்ச்சல் போன்றது. தாக்க வேண்டிய இடத்தில் தாக்கி, அரிக்க வேண்டிய இடத்தில் அரித்து, அள்ளிப்போக வேண்டிய இடத்தில் அள்ளிப்போவது, அதிர வருவது. அவர் தாம் ஆரம்பித்த பிறீபிறெஸ் என்னும் விடுதலைப் பத்திரிகையிலும் இந்துசாதன ஆங்கிலப் பத்திரிகையிலும் கருத்து நிறைந்த கட்டுரைகளை எழுதியுள்ளார்.

எழுத்தாற்றலும் பேச்சாற்றலும் வாய்ந்த குலசிங்கம் அவர்கள் அப்புக்காத்து வேலையில் மெத்தப் பிரகாசித்தவர். ஐம்பதாண்டுகளுக்கு மேலாக உடை வழக்குகளிலும், தேசவழமை வழக்குகளிலும் சிங்கமாகவே அவர் மதிக்கப்பெற்றார். தேசவழமை வழக்குகளில் அவருக்குத் தனியாற்றல் இருந்தது, உடைக்க முடியாத சிக்கல் நிறைந்த வழக்குகளை ஒரு வசனத்தில் நீதிபதிக்கு விளக்கி நீதி வழங்க வைப்பதில் அவருக்கு நிகர் அவரேதான்.

தமிழர் என்று ஒரு இனமுண்டு என்று அவர் அபிமானங் கொண்டு எழுதியவை சிங்களவரைச் சிந்திக்க வைத்தன. ஆனால் அவர்கள் செயலிற் காட்டவில்லை. தமிழர் மகாசபையின் சார்பில் குலசிங்கம் அவர்கள் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தால் ஒருவேளை நிலைமை மாறியிருக்கலாம். அவர் டொனமூர் அரசியலமைப்பையும், சோல்பரி அரசியலமைப்பையும் வன்மையாகக் கண்டித்தவர்.

குலசிங்கம் அவர்களின் சட்டத்துறையும், ஆங்கிலப் புலமையும் கரைபுரண்ட தன்மையிலும் பார்க்க அவர் கொண்ட விவசாய நாட்டம் மிகப் பரந்தது. "அன்னை பூமி அழைக்கிறாள் அங்கே செல்க தம்பிமார்" என்று மில்க்வைற் தொழிலதிபர் நாடு நகரம் எங்கும் விண் கூவுவதற்கு முன், நாற்பதாண்டுகளுக்கு முன் செயலிற் காட்டிய முன்னோடி குலசிங்கம் அவர்களேயாவர். கிளிநொச்சிப் பிரதேசத்துக்கு முன்னோடியாகப்போன

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்)

★ கோணல் மனத்துக்கும் கடவுளுக்கும் வெகுதூரம் ★

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

## சட்ட மேதை...

சேர். இராமநாதன், எம். ஏ. முத்துக்குமாரு முதலானேருள் குலசிங்கம் அவர்களும் ஒருவர். சீவகசிந்தாமணி என்னும் காப்பியத்தின் தலைவன் சீவகன் பல துறைகளில் கைதேர்ந்தவன். அவன் காதலிகளுள் மண்மகளும் ஒருத்தி. அங்ஙனமே நிலமகளே தமது முதற் காதலி என்று குலசிங்கம் அவர்கள் முற்றவெளிப் பிரசங்கங்களில் அக்காலத்திற் கூறியதோடு தமது பெண்களுக்கு நிலத்தையே சீதனமாக வழங்கினர். அத்திலாந்திக் சமுத்திரத்தைக் கடந்து அமெரிக்காவில் குடியேறிய அக்காலத்து முன்னேடிகள் போல இக்காலத்தவருக்குக் கிளிநொச்சியைக் காட்டியவருள் குலசிங்கமும் ஒருவராவர். அவர் அக்காலத்தில் கரடி, புலி, யானை முதலிய மிருகங்களையும், நுளம்புத் தொல்லையையும், தண்ணீர்ப் பஞ்சத்தையும் எதிர்த்து 150 ஏக்கர் நிலத்தை வளமாக்கவே சட்டத்துறையில் வந்த வருவாயைப் பயன் படுத்தினர். அவரின் நேர்மையையும், தொழில்த் திறமையையும், அநுபவத்தையும் கருத்திற் கொண்டு அவரை நீதிபதியாக்குவதற்கு அரசாங்கம் பலமுறை முயன்றது. அவர் அத்தகைய பதவி பொது மக்கள் தொடர்பைத் துண்டித்துவிடும் எனக்கருதி விரும்பவில்லை. பெருத்த தேகமும், அதிகாரத் தோற்றமும் கொண்ட குலசிங்கம் அவர்கள் மெழுகுபோல உருகும் அன்பிதயம் கொண்டவர். ஏழைகளிடம் இரக்கம் கொண்டவர். அவர்களுக்காக இலவசமாகவும் வழக்குப் பேசுபவர். இசைக்கலையில் பற்றுள்ளம் கொண்டவர். இசையை வெகுவாக நயப்பவர். மக்கட் செல்வமும், பேரக் குழந்தைப் பெருக்கமும் நிறைந்தவர். இவர்கள் யாவரும் அவரின் விருப்பத்தை நிறைவேற்றி வருகிறூர்கள். இவர்களுள் ஒரு குழந்தை இசையுலகில் மிகவும் பிரகாசிக்கிறுள்.




## சாரணீய தர்மம்



ஸ்ரீ ராமர் தமது மனம் நல்ல இடத்தையே நாடும் என்று திடமாகக் கருதக்கூடிய வகையில் தன்னைக் கட்டுப் படுத்தி ஆட்சி செய்திருந்தார். அவர் எதனையும் தீயவழியிற் செய்ததில்லை. ''ஏகும் எவ்வழி என்மனம் அவ்வழி நல்வழி'' என்பது அவருடைய வாக்கியம். இந்த வகையில் சாரணன் மனதில் தீயவை புகுவதில்லை. அவன் நல்லதையே நினைத்து, நல்லதையே பேசி, நல்லதையே செய்பவன். அவன் சுத்தமான ஆண்மை உள்ளவன்.

சாரணன் நாட்டுக்குச் சேவை செய்வதில் தயங்குவதில்லை. அவன் எவ்வித ஆபத்தையும் சமாளிக்கக்கூடியவன் அவனுக்குப் பரோபகாரமாகப் பிறர்க்குதவி செய்யத் தெரியும் அவன் சமையல், மருத்துவம் முதலிய தொழில்களையும் அறிந்தவன். எதிலும் ஊக்கமும், தன்நம்பிக்கையும் விசுவாசமும் உள்ளவன். தன்னைத் தியாகஞ் செய்வதிலும் அவன் தயங்குவதில்லை. தான் மேற்கொள்ளும் எந்தத் தொழிலுக்கும் சாரணீயதர்மம் தடையாக இருப்பதில்லை என்பதை அவன் அநுபவத்தில் நன்குணர்ந்தவன்.

சாரணீய தர்மத்தை உணர்ந்து அதன் கட்டுக்கோப்பில் அடங்கி வாழ்பவனுக்கு வேறெந்தத் தொழிற்பயிற்சியும் இலகுவாக அமையும். சின்னஞ்சிறிய காரியங்களை நுணுக்கமாக அவதானிக்கவும், சிந்தனையை ஒழுங்காக அமைக்கவும், நினைவாற்றலை விருத்தி செய்யவும் சாரணீயம் உதவுகிறது. அன்றிப் புத்திக் கூர்மை நுண்ணறிவு மதியூகம் என்பன உண்டாவதற்கும் வழியாகும்.

## 1978 ஏப்ரல் மாத நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 3 | திங்கள் | ஏகாதசி விரதம் |
| 5 | புதன் | பிரதோஷ விரதம் |
| 7 | வெள்ளி | அமாவாசை விரதம் |
| 8 | சனி | சாந்திர வருடம் வண்ணை காமாட்சி |
| 9 | ஞாயிறு | சௌபாக்கிய கௌரி விரதம் [கொடி |
| 10 | திங்கள் | கார்த்திகை விரதம் |
| 12 | புதன் | இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் |
| 13 | வியாழன் | கைலாசபிள்ளையார் கொடி [கொடி |
| 14 | வெள்ளி | காலயுத்தி வருடப் பிறப்பு |
| | | மானிப்பாய் மருதடி விநாயகர் தேர் |
| 19 | புதன் | ஏகாதசி விரதம் |
| | | திருநெல்வேலி சிவன் கொடி |
| 20 | வியாழன் | பிரதோஷ விரதம் |
| 21 | வெள்ளி | வண்ணை காமாட்சி தேர் |
| | | உமாபதி சிவாசாரியார் குருபூசை |
| 22 | சனி | சித்திரா பூரணை |

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர்: ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-4-78.